## கட்சி அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு

# மக்களுக்கான அரசியல் பாதையை தொடங்கி வைத்துள்ளார் முதல்வர்!

## ‘சன் நியூஸ்’ தொலைக்காட்சி ‘கேள்விக்களம்’ விவாதத்தில் விடுதலை இராஜேந்திரன் கருத்து!

சன் நியூஸ் தொலைக்காட்சியில் மு.குணசேகரனை நெறியாளராகக் கொண்டு நடைபெற்ற “கேள்விக் களம்” நிகழ்ச்சியில், எத்தனை பயணம் ஒரே நேரத்தில் தொடங்கி நடக்கிறது. ஒவ்வொன்றுக்கும் ஒரு நோக்கம் இருந்தாலும், தேர்தல் தான் இலக்கு, இந்தப் பயணங்களை நீங்கள் எப்படி புரிந்து கொள்கிறீர்கள், எதற்காக இவைகள் எல்லாம் நடக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்று விவாதத்தில் நெறியாளர் மு.குணசேகரன் தொடுத்த வினாக்களைத் தொடர்ந்து விடுதலை இராஜேந்திரன் அளித்த பதில் வருமாறு:-

கட்சியினுடைய புரமோஷன் தான். தேர்தல் வரப்போகிறது. இதற்கு முன்பு நடந்த தேர்தல்களில் 9 மாதங்களுக்கு முன்பெல்லாம் பிரச்சாரங்கள் துவங்கவில்லை. இப்போது எதற்கு 9 மாதங்களுக்கு முன்பு பிரச்சாரம் தொடங்குகிறது என்ற கேள்வி முன் வைக்கப்பட்டு இருக்கிறது. நான் நினைப்பது என்னவென்றால், இந்தப் பிரச்சாரத்தை, ஆரம்பித்து வைத்தது பாரதிய ஜனதா கட்சிதான்.

முதன் முதலாக அ.தி.மு.க.- பா.ஜ.க. கூட்டணி என்பது கூட்டணிக்கான தேர்தலுக்கான ஒரு கணக்கை தொடங்கி வைத்தது அமித்ஷாதான். அப்போது தேர்தல் பயணத்தை அவர் தான் தொடங்கி வைத்து இருக்கிறார். அதற்குப் பிறகு இந்தத் தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்து, இன்றைக்கு மக்களை சந்திக்கப்போகிறோம் என்று எல்லோரும் கிளம்பி இருக்கிறார்கள்.

தி.மு.க.வைப் பொறுத்த வரை இன்றைக்கு ஏன் மக்களை சந்திக்கப் போகிறார்கள்? எதற்காக 10 மாதங்களுக்கு முன்பு, அமித்ஷா வந்து இந்தக் கூட்டணியை உருவாக்குகிறார். இந்தப் பத்து மாதத்திற்கு முன்பே, இந்தத் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கி நடத்த வேண்டிய அவசியம் ஏன் இருக்கிறது என்று பா.ஜ.க. தரப்பில் ஏன் உணரப்படுகிறது?

**இந்தக் கேள்விக்கு சரியான விடை எது என்று பார்த்தால், தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கின்ற திராவிட மாடல் ஆட்சி, மக்கள் செல்வாக்கோடு வலிமையாக இருக்கிறது. இந்த ஆட்சியை அகற்ற வேண்டும் என்று சொன்னால், கடுமையான ஒரு பிரச்சாரம் தேவைப்படுகிறது. அதை வந்து நாம் முன் கூட்டியே, ஒரு வருடக் காலம் தொடங்கி நடத்த வேண்டும். அப்படி என்கிற ஒரு நோக்கத்திற்காகத்தான் அவர்கள் இன்றைக்குத் தொடங்கி இன்றைக்கு தீவிரமாக போய்க்கொண்டு இருக்கிறார்கள். இது இந்த ஆட்சியை அசைத்துப் பார்ப்பதுதான். இந்த ஆட்சி வலிமையாக இருப்பது என்பதினால்தான்.**

**முதலமைச்சரைப் பொறுத்த வரையிலும், மக்கள் சந்திப்பு பயணம் என்பது தொடர்ச்சியாக, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறன்ற போதே அவர் மக்கள் சந்திப்பு பயணத்தைத்தான் நடத்தி இருக்கிறார். அவர் அப்போதே ஒவ்வொரு முறையும் போனார். அப்போதே அவர் ‘உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’ என்ற பிரச்சாரத்தை அப்போது மக்களிடத்தில் தொடங்கினார். அப்போது மக்களுடைய கோரிக்கை மனுக்களை வாங்கினார். அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தப் பிறகு 100 நாட்களில் அந்த மனுக்களை தீர்த்து வைப்பேன் என்று சொன்னார். ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் அந்த மனுக்களுடைய 80 சதவீதப்பணிகளை தீர்த்து வைத்தார்.**

அதற்குப் பிறகு முதல்வரின் முகவரி துறை அப்படி என்ற ஒரு துறையை உருவாக்கினார். அதில் மக்கள் சந்திப்புகளை ஏற்படுத்தினார். அதில் மக்களுடைய பிரச்சினைகளை கேட்டார்.



மு.குணசேகரன் நெறியாளர்
விடுதலை ராஜேந்திரன் திராவிடர் விடுதலை கழகம்

மக்களுடைய சந்திப்பு நிர்வாகத்தை மக்களிடம் கொண்டு செல்லுதல் அப்படி என்கிற ஒரு கோட்பாட்டை தொடர்ச்சியாக எதிர்க்கட்சித் தலைவராக இருந்ததில் இருந்து மக்கள் சந்திப்பை தொடர்ச்சியாக நடத்திக் கொண்டு வருகிறார். அதனால் இப்போது மக்கள் சந்திப்பு என்பது புதிய விஷயம் அல்ல.

இப்போது இவர்கள் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி வைத்து அந்த தேர்தல் பிரச்சாரப் பிரச்சினை வந்ததற்குப் பிறகு; இன்றைக்கு ‘ஓரணியில் தி.மு.க.’ என்று அரசின் சாதனைகளைச் சொல்லி, செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறது.

**ஆனால் இன்றைக்கு, வெளியே வந்திருக்கக்கூடிய, மக்களைச் சந்திக்கக்கூடிய எதிர்க்கட்சிகள், இதுவரை கடந்த காலத்தில் இப்படி மக்களைச் சந்திக்கின்ற பிரச்சினைகளைச் சந்திக்கின்ற வாதங்களை நடத்தினார்களா? மக்களிடம் போனார்களா? மக்கள் பிரச்சினைகளைக் கொடுத்தார்களா? மழை வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்பட்டபோது, எந்த அரசியல் கட்சியும் அந்த மக்களை வெள்ளத்தில் இருந்து காப்பற்ற உதவி செய்வதற்கோ எதிர்க்கட்சியாக இருந்த அ.தி.மு.க.வே செய்யவில்லை.**

**மக்கள் முன்பு எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க. கொரோனா காலத்திலேயும், வெள்ளப் பாதிப்பின் போதும், தற்போது முதலமைச்சராக இருக்கும் மு.க.ஸ்டாலின் அவர்கள் போய் மக்களைச் சந்தித்து வந்திருக்கிறார். அப்போது மக்கள் சந்திப்பு என்பது முதலமைச்சருடைய, திராவிட மாடல் ஆட்சியினுடைய ஒரு பண்பாகவும் ஒரு கொள்கையாகவும் அவர்கள் தொடர்ச்சியாக இதனை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பயணத்தை தொடர்ச்சியாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.**

இவர்கள் இன்றைக்கு தேர்தல் வந்துவிட்டது என்ற காரணத்தினால் எதிர்க்கட்சிகள் இன்றைக்கு நாங்கள் மக்களை சந்திக்கிறோம் அப்படி என்று மக்களை சந்திக்கிறார்கள்.

*நெறியாளர்: இப்போது தேர்தல் வந்துவிடவில்லை. இந்த தேதிக்கு வரப்போது இல்லை. அது எப்போது நடக்கும் என்று தெரியவில்லை. அது ஏப்ரல் மாதமா மே மாதமா என்று பிப்ரவரி இறுதியில் தான் தெரியும். பொதுவாக தமிழ்நாட்டில் இரு துருவ அரசியல் நடந்த காலத்தில் ஜெயலலிதா எதிர்க்கட்சியாக இருந்தபோது, கடைசி மூன்று மாதம் - அதாவது மே மாதம் தேர்தல் என்றால் ஜனவரியில் கூட்டணியும் மார்ச் மாதத்தில் தேர்தல் பிரச்சாரமும் செய்வார். இப்போது எடப்பாடி தொகுதிகள் தோறும் பிரச்சாரம் செய்கிறார். இந்த அணுகுமுறை மாற்றம் குறித்து...*

**விடுதலை இராஜேந்திரன்:** இப்போது நிறைய கட்சிகள் தேர்தல் களத்தில் நிற்கிறார்கள். இது தேர்தல் நேரத்தில் மட்டும் மக்களைப் போய் சந்தித்து வாக்கு கேட்டால் வெற்றி பெற்று விட முடியும், அப்படி என்ற நிலையில் இருந்த எதிர்க்கட்சிகள், இன்றைக்கு தேர்தலை மட்டும் சந்தித்தால் போதாது, மக்களை தொடர்ச்சியாக சந்திக்க வேண்டும், அப்படி என்கிற ஒரு கட்டாய நிலையை உருவாக்கினதே தமிழக முதலமைச்சரும், திராவிட மாடல் ஆட்சியும்தான்.

அதற்கு **ஆளுங்கட்சியினர் கட்டாயமாக இயல்பான நிலையில் இருக்கிறார்கள். மக்களுடன் சந்திப்பு அதாவது உட்கார்ந்து கொண்டு அறிக்கை விட்டுக் கொண்டு, போஸ்டர் ஒட்டிக் கொண்டு மக்களிடம் பேசினால் முடியாது. மக்களை நேரடியாக சந்திக்க வேண்டும், பேச வேண்டும். அப்படி என்கிற ஒரு பண்பு மு.க.ஸ்டாலின் காலத்தில் வந்திருக்கிறது. இந்த மக்கள் பிரச்சாரம் மட்டுமல்ல, நிர்வாக கட்டமைப்பையே இன்றைக்கு மக்களிடம் கொண்டு செல்வது அப்படி என்கிற ஒரு அரசியல் தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது.**

அரசு நிர்வாகத்தை வந்து கோட்டையில் உட்கார்ந்து கொண்டு செய்வதை விட, மக்களிடம் கொண்டு போய்,அரசு அதிகாரிகளைக் கொண்டு போய், அரசு மக்கள் குறைகளைக் கேட்டு மக்களுக்கான ஒரு பால்டிக்ஸ், பீப்பிள்ஸ் பால்டிக்ஸ் மக்களுக்குகான ஒரு அரசியல் அப்படி என்கிற பண்பை இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சி உருவாக்கியதினால், இந்த வட்டத்தில் இருந்து அவர்கள் வெளியே போக முடியாததினால், இந்த வட்டத்துக்குள் இருந்து செயல்படக் கூடிய ஒரு கட்டாயத்திற்கு எதிர்க்கட்சிகள் வந்திருக்கிறார்கள். அதன் காரணமாகவே இன்றைக்கு மக்களை நோக்கி ஒரு அரசியலை நடத்த வேண்டிய கட்டாயத்திற்கு இன்றைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இந்த பல முனை அரசியல், கூட்டணி குழப்பங்கள் இருக்கிறது. ஒவ்வொரு கட்சியும் தான் தான் முதலமைச்சர் அப்படி என்று இருக்கிற அத்தனை கட்சிகளும் மக்களிடத்தில் நாம் போக வேண்டும். நமது இருப்பை காட்ட வேண்டும். அப்படி என்கிற ஒரு கட்டாயம் இன்றைக்கு வந்திருக்கிறது.

ஆனால் இந்தத் தேர்தல் ஜுரத்தை உருவாக்கி வைத்தது. முதன் முதல் துவக்க நிலையில் புள்ளி போட்டது அமித்ஷா. இந்த கூட்டணிக்குப் பிறகு தான். இந்தப் பிரச்சினை தேர்தல் களத்தை நோக்கிய பிரச்சினையாக மாறியது. இந்தக் கூட்டணியை அமித்ஷா ஏன் ஒரு வருடத்திற்கு முன்பாக உருவாக்குகிறார். ஒரு வருடத்திற்கு முன் தமிழ்நாட்டு அரசியலில் நாங்கள் கூட்டணியை உருவாக்கி விட்டோம். தேர்தல் நேரத்தில் இரண்டு மாதம் மூன்று மாதங்களுக்கு முன்பு கூட்டணி மாறுவது எந்தக் கட்சி எந்தக் கூட்டணியில் இருக்கிறது, எந்தக் கட்சி வரப்போகிறது என்று கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே பார்த்தோம். கடைசி நேரத்தில கூட்டணியில் மாற்றம் இருந்ததை எல்லாம் நாம் பார்த்தோம். ஆனால் ஒரு வருடத்திற்கு முன்பே நாங்கள் கூட்டணியை உறுதி செய்து விட்டோம்.

அதற்கான தேர்தல் பணியைத் தொடங்கிட்டோம் அப்படி என்கிற நிலைமை ஏன் வந்தது என்றால், தி.மு.க.வில் இருக்கின்ற கூட்டணிப் பிரச்சினை கிடையாது. அவர்கள் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். வலிமையான ஒரு அணியாக இருந்து கொண்டு இருக்கிறார்கள். அதில் எந்தமாற்றமும் இல்லை என்பதினால், அதனை உடைப்பதற்கு அதனை தகர்ப்பதற்கு தமிழ்நாட்டில் இருந்து இந்த அரசை அகற்றுவதற்கான அத்தனை முயற்சிகளையும் இன்றைக்கு ஒன்றிய அரசு செய்து கொண்டு இருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரை இன்றைக்கு தமிழ்நாடு ஒன்று தான் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இந்தியாவிலேயே இன்றைக்கு ஒன்றிய அரசுக்கு எதிர்ப்பாக, இந்துத்துவாவிற்கு எதிர்ப்பாக இருப்பது தமிழ்நாடு மட்டும்தான்.

அப்படி இருப்பதினால் **தமிழ்நாட்டை எப்படியாவது அகற்ற வேண்டும். தமிழ்நாட்டை அகற்றினால் பிரச்சினை முடிந்து போய் விட்டது. அதனால் தான் இன்றைக்கு எல்லா காரியங்களும் நடந்து கொண்டு இருக்கின்றது. அந்த அடிப்படையில்தான் இதற்கு முன்னுரிமை கொடுத்து தமிழ்நாட்டில் ஒரு வருடத்திற்கு முன்பே கூட்டணியைத் துவங்கி,அந்தக் கூட்டணிக் கட்சிகளுக்குள் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கொண்டு வர வேண்டும் என்று சொன்னால் அதற்கு ஓராண்டு காலம் தேவைப்படும். அவர்களுக்குள் உள்ள முரண்பாடுகளை சரி செய்வதற்கு இது தேவைப்படும். அப்போது தான் இந்தக் கூட்டணிக்குள் ஒரு ஒற்றுமையை உருவாக்கி நாம் மக்களிடம் போக முடியும். அப்படி என்று முன்கூட்டியே ஒரு வருடத்திற்கு முன்பே திட்டமிட்டு இந்தப் பயணத்தை துவக்க வேண்டிய கட்டாயத்திற்கு இவர்கள் தள்ளப்பட்டதற்கு காரணம் திராவிட மாடல் ஆட்சியை அகற்ற வேண்டும் அப்படி என்கிற ஒரு நோக்கத்தினால் தான் இது நடத்தப்பட்டது.**

*நெறியாளர்: தொண்டர்களை இப்போதே தயார் செய்வது - செல்வாக்கை கூட்டணிக் கட்சிகளுக்கு காட்டுவது என்பது ஒரு கோணம். இன்னொன்று தேர்தலில் ஏதேனும் ஒரு பிரச்சினை வரப்போகிறதா? ஆட்சியினை அகற்ற அமித்ஷா முயற்சிக்கிறார் என்பதனாலேயே 10 மாதங்களுக்கு முன்பே கூட்டணி அமைத்தார் என்கிறார்கள். ஆட்சிக்கு எதிர்ப்பான அலை இருக்கிறதா? இல்லை ஆதாரவான அலை இருக்கிறதா? நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?*

**விடுதலை இராஜேந்திரன்:–** இந்தத் தேர்தல் களத்தில் எந்த பெரிய அலையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. திராவிட மாடல் ஆட்சியினுடைய சாதனைகள், அந்தச் சாதனைகளை அவர்கள் மக்களிடத்தில் கொண்டு போவது, அந்தச் சாதனைகள் ஒழுங்காக நடக்கிறதா என்று பாலோ செய்வது. இதனுடைய தொடர்ச்சியனை நிகழ்வுகள். கிட்டத்தட்ட திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தமிழக முதல்வரைப் பொறுத்தவரைக்கும் கட்சி அரசியல் அப்படி என்கின்ற ஒரு கோட்பாட்டை ஒதுக்கிவைத்துவிட்டு, மக்களுக்கான திட்டங்களை அறிவிப்பது, மக்களுக்கான கொள்கைகளை அறிவிப்பது, மக்களுக்கான திட்டங்கள் ஒரு பீப்பிள் பால்டிக்ஸை அவர் கையில் எடுத்து இருக்கிறார்.

அவர் இந்த எதிர்க்கட்சிகளுக்கு அதிகமான லாவணி பேசுவது ,அறிக்கை விடுவது என்று இருப்பதில்லை. கடந்த காலங்களில் பார்த்தோமேயானால் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்து அவருடைய அரசியல் கலைஞர் எதிர்ப்பு அரசியல், தி.மு.க. எதிர்ப்பு அரசியல் தான். ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது ஒரே டார்க்கெட் தி.மு.க. எதிர்ப்பு அரசியல், கலைஞர் எதிர்ப்பு அரசியல் தான் இருந்தது. அதே மாதிரி எடப்பாடி பழனிச்சாமி இருந்த போதும் அப்படித்தான் இருந்தது. அதனை நோக்கி தான் போனது. ஆனால் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் வந்ததற்குப் பிறகு அந்தக் கட்சி அரசியலை ஓரங்கட்டி வைத்துவிட்டு மக்களுக்கான ஒரு அரசியல் பாதையை அவர் தொடங்கி வைத்தார்.

*நெறியாளர்: அ.தி.மு.க. எதிர்ப்பு அரசியலை முதல்வர் அவர்கள் செய்யவில்லை என்கிறீர்களா?*

**விடுதலை இராஜேந்திரன்:** போகிற போக்கில் தான் விமர்சனங்கள் செய்யப்பட்டதே தவிர, அ.தி.மு.க. தரப்பில் ஒரு பெரிய எதிர்ப்பு அரசியல் வலிமையாக செய்யப்படவில்லை. அவர்கள் சட்டமன்ற நடவடிக்கைகள் மற்றவற்றையும் பார்தோமேயானால் அவர்கள் ஒரு டைனோமோவில் இருந்தார்கள். போனமுறை அவர்கள் பா.ஜ.க.வை ஆதரித்துவிட்டு பிறகு பி.ஜே.பி. எதிர்ப்பு நிலை, அதற்கு பிறகு பி.ஜே.பி. ஆதரவு நிலை எடுக்கின்ற ஒரு சிக்கலில் ஒரு குழப்பத்தில் அவர்கள் மாட்டிக் கொண்டிருப்பதினால் அவர்கள் எந்த அரசியலை முன்னெடுப்பது என்பதில் அவர்களுக்கு ஒரு குழப்பம் இருந்தது.

அந்த ஒரு பிரச்சினையினால் தி.மு.க. பாதை மட்டும் மக்கள் அரசியலில் மிகத் தெளிவான அரசியல், மக்களுக்கான திட்டங்கள் என்று அதனை நோக்கி தான் அவர்கள் பயணம் இருந்தது. அதனால் கட்சி அரசியலை முதலமைச்சர் மினிமேஸ் செய்தார். முதலமைச்சரின் முக்கியமான ஒரு விஷயம். கடந்த காலங்களில் பத்து பதினைந்து வருடங்களில் பார்க்காத ஒரு பண்பு. தமிழக முதலமைச்சர் இந்த அரசியலை உருவாக்கி வைத்தது.

இரண்டாவதாக **நிர்வாக கட்டமைப்பு, அரசுகளிடம் தான் மக்கள் வர வேண்டும் அப்படி என்று சொன்னால், அரசு இயந்திரம் மக்களுக்கான டெலிவரி செய்யாது , அதில் ஒரு பெரிய தேக்கம் இருக்கிற காரணத்தினால், அரசு இயந்திரத்தை மக்களிடம் கொண்டு சென்று, மக்களுடைய பிரச்சினைகளை அரசே சென்று தீர்க்கின்ற வகையில், மக்களுக்கான அரசாக மாற்றி அமைத்து அதனை செயல்படுத்தி காட்டி இருக்கிறார். இதையெல்லாம் அவர் கொண்டு வந்த சேர்த்திருக்கின்ற பண்பு மாற்றங்கள்.**

இந்த பண்பு மாற்றங்களால் இந்த ஆட்சிக்குள்ள மக்களின் ஆதரவுகளையும் மக்களின் செல்வாக்கையும்நாம்எப்படிசந்திக்கப்போகிறோம். எப்படி நாம் உடைக்கப்போகிறோம் அப்படி என்கிற ஒரு அச்சமும் பயமும் இந்த எதிர்க்கட்சி அணிகளுக்கு இருக்கின்ற காரணத்தினால் தான் ஒரு வருடத்திற்கு முன்பே இந்தப் பயணத்தை துவங்கி இருக்கிறார்கள்.

இவ்வாறு விடுதலை இராஜேந்திரன் விவாதத்தில் பங்கேற்று பேசினார்.

---

### நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் மாணவர் அணி சார்பில்

## கல்லூரிகளில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை விழிப்புணர்வு பிரச்சாரம்!

நாமக்கல் ஜூலை 28

திமுக தலைமைக் கழக அறிவிப்பின்படி, கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைப்படி தமிழ்நாடு முழுவதும் கிராமப்புற, நகர்ப்புற பகுதிகளில் கழக நிர்வாகிகள் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் உறுப்பினர் சேர்க்கை நடத்தி வருகின்றனர்.

அதேசமயம் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை கல்லூரி மாணவ, மாணவிகளிடம் கொண்டு சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் திமுக மாணவர் அணி சார்பில் விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்று வருகிறது.

கழக மாணவரணி அறிவிப்பின்படி நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆலோசனைப்படி நாமக்கல் சட்டமன்ற தொகுதி நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள கவிஞர் ராமலிங்கம் அரசு மகளிர் கல்லூரி வாயில் முன்பாக நாமக்கல் கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் நாமக்கல் கிழக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கடல் அரசன் கார்த்தி தலைமையில், துணை அமைப்பாளர்கள் எம்.என். டி.கௌதம், சங்கீதா ஆகியோர் முன்னிலையில் திராவிட மாடல் ஆட்சியில் கல்விக்கு தரும் முக்கியத்துவம் மற்றும் புதுமைப்பெண் திட்டத்தை செயல்படுத்திய முதல்வருக்கு நன்றி கூறியும், ஒன்றிய பாஜக அரசுக்கு எதிராக ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் உறுப்பினராக இணைய மாணவிகளிடம் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் , மாமன்ற உறுப்பினர்கள் சரோஜா, கிருஷ்ண லட்சுமி, வார்டு செயலாளர் சரவணன், ரபீக், சார்பு அணி நிர்வாகிகள் கௌதம், ராஜேஷ் , ஸ்ரீராம், அஜித், பவித்ரன், நிதிஷ், சிவரஞ்ஜினி, மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்! மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் . எம்.எல்.ஏ,முன்னிலையில் இராமநாதபுரம், பட்டிணம்காத்தான், கிங்ஸ் பேலஸ் மகாலில், மாவட்ட அவைத்தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வனத்துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக் குழு தலைவர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் உரையாற்றினார்.

---

### ஞான.இமையநாதன் தலைமை! எம்.கே.மருது, டி.ராஜ்குமார் பங்கேற்பு!

## மயிலாடுதுறை உளுத்துக்குப்பையில் தெருமுனை பிரச்சார கூட்டம்!

### நிவேதா எம்.முருகன் - திருப்பத்தூர் ரஜினி, இரா.மதுமிதா சிறப்புரை!

மயிலாடுதுறை. ஜுலை. 28–

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெரு முனை பிரச்சார கூட்டம் உளுத்துக்குப்பை கடைவீதியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் ஞான.இமையநாதன் தலைமை தாங்கினார். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வி.ஜான் (எ) ஜான்சன் வரவேற்றார்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, ஒன்றிய அவைத்தலைவர் வி.பன்னீர் செல்வம், ஒன்றிய துணைச் செயலாளர்கள் கவி.கார்த்திகேயன், சுப.சிற்றரசன், சந்திரவடிவம்ராஜா, பொருளாளர் கோ.மோகன், மாவட்ட பிரதிநிதிகள் கே.எஸ்.கண்ணன், , மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் டி.ராம்குமார், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் இ.நூருதீன், க.முருகன், ரா.நந்தகோபாலகிருஷ்ணன் , பா.பிரபாகரன், ஆ.முத்துக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், தலைமைக் கழகப் பேச்சாளர் திருப்பத்தூர் ரஜினி, இளம் பேச்சாளர் இர.மதுமிதா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாவட்டக் கழக பொருளாளர் கண்ணகிபன்னீர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செம்பனார்கோயில் தெற்கு எம்.அப்துல்மாலிக், செம்பானார்கோயில் மத்திய அமிர்த.விஜயகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கோ.அசோக் குமார் நன்றி கூறினார்.


நெல்லை கிழக்கு மாவட்டம் களக்காடு தனியார் மகாலில் தி.மு.க முக்கிய நிர்வாகிகள் கலந்துரை யாடல் கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் பங்கேற்று உரையாற்றினார். உடன் நம்பி, ஆ.பிரபாகரன், ஜார்ஜ் கோசல், பெருமாள், ராஜ், சுரேஷ், செல்வக்கருணாநிதி, ராஜன், மனிசூரியன், செல்வசூடாமணி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.